Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 12 திங்கட்கிழமை (25-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 59

# புலிகளின் அதிரடித் தாக்குதலில் அதிகாரி உட்பட 14 படையினர் பலி!

## திருகோணமலை சிற்றாறில் நேற்றுப் பிற்பகல் சம்பவம்

கொழும்பு, ஜனவரி 25

திருகோணமலை சிற்றாறுக்குத் தெற்கே நேற்றுப் பிற்பகல் விடுதலைப் புலிகளின் அணி ஒன்று மறைந்திருந்து நடத்திய அதிரடித் தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரி உட்பட 14 படையினர் உயிரிழந்தனர்.

கொழும்பில் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் நேற்றிரவு இத்தகவலை வெளியிட்டன.

தமது படை முகாமில் இருந்து மற்றொரு பகுதி முகாமுக்கு படையினர் ரோந்து சென்று கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும்—

காயமடைந்த படையினர் பலர் முகாமுக்கு தப்பி ஓடினர் என்றும் செய்திகள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின்போது ஏராளமான ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. (ஒ-6)

## தமிழ்-சிங்கள மக்களுக்கு கிட்டு மறைவால் இழப்பு

### பி. பி. ஸியில் விமர்சனம்

லண்டன், ஜன. 25

வடக்கு – கிழக்குப் பிரச்சினைக்கு சமாதான வழிகளில் தீர்வு காண்பதில் நம்பிக்கை கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான — கிட்டுவின் மரணம் இரு இன மக்களுக்கும் பெரும் இழப்பு என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

பி. பி. ஸியின் அலுவலக விமர்சகர் லறி ஜெக்கட் எழுதிய செய்திக் கட்டுரையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐரோப்பாவில் கிட்டு தங்கியிருந்த வேளையில் கிட்டுவைப் பற்றி அறிந்தவர்கள், அவர் வெளிநாடுகளில் இருந்தபோது சமாதானத்திற்காக முழு முயற்சியுடன் உழைத்தார் எனத் தெரிவித்துள்ளனர்.

கிட்டு வந்த கப்பலில் பெருமளவான ஆயுதங்களும் வெடிப் பொருள்களும் கொண்டு வரப்பட்டன என்பதை கொழும்பு இராணுவ வட்டாரங்கள் நிராகரித்துள்ளன. அக்கப்பலில் ஆகக்கூடியது 280 தொன் பொருள்

(3ஆம் பக்கம் பார்க்க)

### பிரபாவின் அழைப்பை ஏற்று

## வட இலங்கைக்கு கிட்டு திரும்பிக் கொண்டிருந்தார்

### கப்பல் கப்டன் தகவல்

சிங்கப்பூரில் இருந்து நூறு கிலோ மீற்றர் தூரத்தில் வைத்து ''எம். வி. அஸாத்'' என்ற கப்பலில் கடந்த 7 ஆம் திகதி திரு. கிட்டு ஏறினார். அவர் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனின் அழைப்பை ஏற்று வட இலங்கைக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்.

''எம். வி. அஸாத்'' கப்பலின் கப்டனும், அக்கப்பலில் திரு. கிட்டுவுடன் பயணம் செய்து உயிர் தப்பியவருமான திரு. ஜெயச்சந்திரன் இவ்வாறு தகவல் வெளியிட்டதாக ஆந்திர பொலீஸ் மா அதிபர் ருஸ்யா தெரிவித்தார்.

உண்மையில் நடந்தது என்ன என்பது, சம்பவம் இடம்பெற்று சில தினங்களின் பின்னர் ஆந்திர மாநிலப் பொலீஸார் மற்றும் உளவுப் பிரிவினருக்கு கப்பல் கப்டன் ஜெயச்சந்திரன் அளித்த வாக்குமூலத்திலிருந்து தெரிய வந்திருக்கிறது.

வல்வெட்டித்துறை வாசியான ஜெயச்சந்திரன் குவைத்திலிருந்து ஜெத்தாவுக்கு இந்த வணிகக் கப்பலைக் கொண்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது (உ எ)

### சிங்கப்பூரிலிருந்தே

## கிட்டு வந்த கப்பலை இந்தியா நோட்டமிட்டது

கொழும்பு, ஜன. 25

விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. கிட்டுவும் ஏனைய போராளிகளும் சிங்கப்பூருக்கு அப்பால் கடலில் வைத்து— கடந்த 7 ஆம் திகதி — எம். வி. அஸாத் கப்பலில் ஏறினர்.

அன்று முதல் அக்கப்பலின் செயற்பாட்டை சிங்கப்பூரில் இருந்து இந்திய உளவுப் பிரிவினர் அவதானித்துக் கொண்டிருந்தனர்.

கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று இத்தகவலை வெளியிட்டது. (உ)

## புலிகளிடம் 5 கப்பல்கள்!

விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமாக தற்பொழுது ஐந்து கப்பல்கள் உள்ளன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

தளபதி கிட்டு தமது சகாக்களுடன் எம். பி. அஸாத் என்ற கப்பலில் தமிழீழத்துக்கு வந்தபொழுது இந்தியாவின் சதிவலையில் சிக்கிப் பலியானார். அவர் தகர்த்த எம். பி. அஸாத் என்ற அந்தக் கப்பலும் விடுதலைப் புலிகளுக்கே சொந்தமானது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது இந்தியப் படையினர் வசமிருக்கும் —எம். பி. அஸாத் கப்பலின் கப்டன் — விசாரணைகளின் போது விடுதலைப் புலிகளிடம் சோழன், கோல்டன்பேர்ட், சன்பேர்ட், யஹ்தா ஹெரியானா ஆகிய ஐந்து கப்பல்கள் உள்ளன என ஒப்புக் கொண்டுள்ளார் என்றும் செய்தி வெளியாகியுள்ளது. (ஒ-எ)

## வலி. வடக்கு ஆலயங்களின் விக்கிரகங்கள் வீதிகளில்!

### திரும்பி வந்த பூசகர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 25

வலி - வடக்கில் உள்ள ஆலயங்களில் இருந்த விக்கிரகங்கள் யாவும் புரட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. ஆலய மணிகள் கழற்றப்பட்டு வீதிகளில் வீசப்பட்டுள்ளன. விக்கிரகங்களில் இருந்த நகைகள் களவாடப்பட்டுள்ளன

கோவில் கதவுகள் உடைக்கப்பட்டு திறந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் இளவாலையிலிருந்து நேற்று முன்தினம் திரும்பிய, அளவெட்டி வடக்கு வீரபத்திரர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### கடந்த புதன், வியாழனில்

## மட்டக்களப்பில் கைதான 80 பேரின் நிலை என்ன?

யாழ்ப்பாணம், ஜன 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் எருவில் கிராமத்தைக் கடந்த வியாழக்கிழமை சுற்றிவளைத்த அதிரடிப் படையினர் அங்கிருந்து 50 தமிழர்களை கைது செய்து களுவாஞ்சிக்குடி முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

அதற்கு முதல்நாள் களுதாவளைப் பகுதியைச் சுற்றி

(3 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில்

## காணாமற் போனவர்களில் 4,368 பேரின் விவரங்கள்

### டென்மார்க் குழுவிடம்

யாழ்ப்பாணம், ஜன. 25

மட்டக்களப்பில் காணாமற் போனதாகக் கருதப்படும் 4 ஆயிரத்து 368 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று டென்மார்க் மனித உரிமைக் குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்த டென்மார்க் மனித உரிமைகள் குழுவிடம் மட்டக்களப்பு சமாதானக் குழுவினர் இந்தப்பட்டியலைக் கையளித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களைக் கண்டு தாம் மிகவும் வேதனைப்படுவதாக டென்மார்க் குழுவினர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி சேவை

யாழ்ப்பாணம், ஜன. 25

கிளாலி — நல்லூர் படகுச் சேவை திங்கட்கிழமையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று விடுதலைப் புலிகள் நிதித்துறை வருவாய் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-

## மீனவர் மீது படையினர் சூடு

மந்திகை, ஜன. 25

நேற்றுக் காலை 7 மணியளவில் பருத்தித்துறை, முனைப் பகுதிக் கடலில் ரோந்து சென்ற படையினர் அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

பெரும் சேதம் எதும் ஏற்படவில்லை. (உ-5-ரி)

## குண்டுச் சத்தம்

யாழ்ப்பாணம் ஜன 25

பூநகரி - கல்முனைப் பக்கமாக நேற்றுக் காலை 9.30 மணியளவில் அடுத்தடுத்து இரு குண்டுச் சத்தங்கள் கேட்டன. (ஒ-17)

# உலக நாடுகள் பலவற்றிலும் இந்திய எதிர்ப்புப் பேரணிகள்

யாழ்ப்பாணம், ஜனவரி 25

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு மற்றும் ஒன்பது போராளிகளை வங்கக் கடலில் மரணப் பொறிக்குள் சிக்க வைத்து, அவர்களின் மறைவுக்குக் காரணமாகவிருந்த இந்திய அரசைக் கண்டித்து உலக நாடுகள் பலவற்றிலும் இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்று வருகின்றன.

அந்தந்த நாடுகளில் உள்ள ஈழத் தமிழர்கள் ஒன்று கூடி, அங்குள்ள இந்தியத் தூதரகங்களுக்கு [illegible] பாட்டப் பேரணிகளை நடத்தி வருகின்றனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸ், ஜேர்மன் தலைநகர் பொன், [illegible] தலைநகர் லண்டன் உட்பட மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும், கனடாவிலும், ஆஸ்திரேலியாவிலும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்றுள்ளன.

ஈழத் தமிழர் அதிகம் வாழும் மற்றும் பல உலகநாடுகளில் இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணிகள் தொடர்ந்து நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணிகளின் போது இந்தியாவின் தான்தோன்றித்தனமான சதிச்செயலைக் கண்டிக்கும் வகையிலும் —

கேணல் கிட்டுவின் தியாகத்தையும், அவர் தமிழ் மக்களுக்குச் செய்த சேவையையும் புகழ்ந்துரைக்கும் வகையிலும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

பேரணிகளின் போது கேணல் கிட்டுவினது முழு அளவிலான உருவப்படங்களும் எடுத்துச் செல்லப்பட்டன. (உ-எ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

உரித்த சோளப் பொத்திகளும், கால் நடைகளுக்குரிய சோள மரங்கள், உரித்த தோல்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச. சின்னத்துரை, கோண்டாவில் வீதி, கோப்பாய் இராசா வீதிச் சந்திக்கு அண்மையில். (5744)

நல்ல நிலையில் உள்ள 'ஈஸ்ரேன்' பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: கருணாநிதி, இல. 21/3, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. (24 09[illegible])

## மாற்றம் - 2

மக்கள் மனங்களில் ஏற்படவேண்டிய மாற்றங்களைக் கொண்ட ''மாற்றம்'' (தை-பங்குனி) சஞ்சிகை வெளிவந்து விட்டது. சிறுவர் கதை, சிறுகதை, மலேரியா, போட்டிகளைக் காண புத்தகசாலைகளை நாடுங்கள். ரூபா 10/-. (24147)

## மணப்பெண் தேவை

செவ்வாய்க்குற்றமற்ற, லக்கினத்தில் ராகு, பரணி நட்சத்திரம், கிரகபாவம் 16 உடைய 28 வயது சைவச் பட்டதாரி ஆசிரியருக்கு மணப்பெண் தேவை. எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (24177)

## கரிசலாங்கண்ணி

கரிசலாங்கண்ணி நாற்று ஒன்றைப் பத்து பால்மா வெற்றுப் பக்கற் தந்து பெற்றுக் கொள்ளலாம். 'மில்க்வைற்' (சி-4284)

## சோதிடம்

உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஜாதகம், கைரேகை, எண்சோதிடம் அங்க லட்சணம் என்பனவற்றின் மூலம் பதில் அளிக்கப்படும். தினமும் காலை 8-30 முதல் 12-[illegible]0 வரை, பிற்பகல் 3-00 முதல் 6-00 வரை. த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், [illegible]84 கோவில் வீதி, நல்லூர் வடக்கு (24180)

## தேனீ வளர்ப்பு

எமது நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்ப நவீன முறையில் செய்யப்பட்ட கூடுகள் விற்பனைக்குண்டு தேனீ குடிகளும் அமர்த்திக் கொடுக்கப்படும் 43, ராதா ஒழுங்கை, ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணையில தொடர்பு கொள்ளவும். (24198)

## வீடு வாடகைக்கு

தனியார் நிறுவனமொன்றில் வேலை பார்க்கும் [illegible] குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை நல்லூர், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் விரும்பத்தக்கது. தொடர்பு இல 875 மே/பா உதயன் ([illegible]-4357)

## மணமக்கள் தேவை

32 வயது, இந்து மணமகன் விஞ்ஞானப் பட்டதாரி உதவி ஆசிரியருக்கு, ஆசிரியை அல்லது தொழில் புரியும் மணமகளும், 28 வயது ஆசிரியை சகோதரிக்கு, வட பகுதியில் தொழில் புரியும் மணமகனும் தேவை மணமக்கள் யாழ் மாவட்டத்தில் கடமைபுரிபவராய் இருப்பதுடன் சைவ போசனம் விரும்பத்தக்கது. இல. 486 மே/பா உதயன், யாழ்ப்பாணம் (24195)

---

# TACEP கற்கை நெறி

ஆசிரியர், எழுதுவினைஞர், பாடசாலையிலிருந்து விலகிய மாணவர்களுக்கான மேற்படி ஆங்கில நிகழ்ச்சித் திட்டம் பின்வரும் நிலையங்களில் ஆரம்பமாகவுள்ளன:

1. பலாலி ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி.
2. வேம்படி மகளிர் கல்லூரி.
3. இராமநாதன் மகளிர் கல்லூரி.

இப்பயிற்சி நெறி மாதமொன்றுக்கு 25 மணித்தியாலமாக 6 மாத காலத்துக்கு சனி, ஞாயிறு (பி. ப. 2-00 — 5-30) நாட்களில் நடைபெறும் கட்டணம் மணித்தியாலம் 5/-. ஆறு மாதத்துக்குமான முழுக் கட்டணத்தை இரு தவணைகளில் செலுத்த வேண்டும்.

இந் நெறிக்கான தகுதிகாண் தேர்வு 31-01-93 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2-00 மணியளவில் பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெறும்.
(இதற்குரிய கட்டணம் ரூபா 30/- உடன் செலுத்தப்படவேண்டும்)

சோ. பத்மநாதன்,
மாநில இணைப்பாளர்,
யாழ். TACEP.

(சி-4282)

---

# SCHOOL OF FINE ARTS

## திருமறைக் கலாமன்ற
### கவின்கலைகள் பயிலகம்

வழங்கும்

இசைக் கலாமணி
திரு. சி. துரைராசா அவர்களின்

## ★ தாளவாத்தியக் கச்சேரி ★

நாள்: 26 — 01 — 1993
நேரம்: மாலை 6-45
இடம்: மன்ற அரங்கு. பிரவேசம் இலவசம்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

செயலாளர்,
C. M. நெல்சன்

(சி-4290)

---

உ

## தீபபூஜை (சமஸ்கிருத எழுத்தில்)
# நூல் வெளியீட்டு விழா

இடம்: காட்டுத்துறை, வண்ணார்பண்ணை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வர ஆலய மண்டபம்.

காலம்: தை மாதம் 12ஆம் திகதி 25-01-93 திங்கட்கிழமை (இன்று) பி ப. 2-30மணி.

நூலாசிரியர்: பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா. விழாவில் பல தமிழ் அறிஞர்களும், அந்தணப் பெரியார்களும் பங்குபற்றுவார்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நூல் வெளியீட்டு விழா
அமைப்புக்குழு.

(24208)

---

30 - 01 - 1993 இல் நடைபெறவுள்ள

# எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான

வழிகாட்டி

## பொதுவிவேகம் - மொழித்தேர்ச்சி

(வெளியீடு: அஸ்ரன் பதிப்பகம்)
(எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்)

(சி-4177)

---

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 25
யாழ். கரப்பந்தாட்டச் சம்மேளனம் பாடசாலைகளுக்கிடையில் நடத்திவரும் கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று மாலை யாழ். இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறவிருக்கும் ஆட்டங்கள் வருமாறு:-

★ ஸ்ரான்லி கல்லூரி அணி எதிர் சென். யோசப் கல்லூரி அணி.
★ யாழ். இந்துக் கல்லூரி அணி எதிர் ஹாட்லிக் கல்லூரி அணி.
★ மட்டுவில் ம ம வி. அணி எதிர் நடேஸ்வராக் கல்லூரி அணி

(உ-17)

---

# DAY CLASSES

(A/L 92 மாணவர்களுக்குரியது)

ECON —
திரு. E. பிரபாகரன்
ACC. —
திரு. சௌந்தி
COM.
திரு. பசில்
LOG/REL. —
பிரபல ஆசிரியர்கள்

## SHAMROCK

யாழ். சுண்டிக்குளி.

[24201]

---

# கலை, வர்த்தக கல்லூரி

வெலிங்டன் சந்திக்கு அருகாமை
யாழ்ப்பாணம்.

துரித மீட்டல்
வினா-விடை

## A/L 92

பரீட்சை முடிவு கிடைத்த பாடசாலை செல்லாத மாணவர்களுக்கான பகல் நேர வகுப்புகள்

ஆரம்பம்:
## 26-01-1993

எமது அனுபவமான ஆசிரியர் குழு:

பொருளியல் —
திரு. உதயன்
கணக்கியல் —
திரு. ஸ்ரீ
வர்த்தகம் —
திரு. இரட்ணம்
அளவையியல் —
திரு. சயந்தன்
இந்துநாகரிகம் —
திரு. ஜோதீஸ்வரன்

குறிப்பு:-

★ வாரத்தில் நான்கு நாட்கள் வகுப்புகள் நடைபெறும்
★ ஒவ்வொரு பாடமும் வாரத்தில் 10மணித்தியாலம் நடைபெறும்.

(சி-4354)

---

# பிரேமதாஸாவை தேர்தலில் தோற்கடிக்க முடியாது!

## 'ஹெல உறுமய' அணி தலைவர் சொல்கிறார்

கொழும்பு, ஜன 25
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் திரு. பிரேமதாஸாவை நேர்மையான முறையில் தோற்கடிக்க முடியாது.

அவரை பதவியில் இருந்து அகற்றுவதற்கு எம்மிடம் பலமான தலைமைத்துவம் கிடையாது.

சுதந்திரக்கட்சி எம். பியும் ஹெல உறுமய அணித்தலைவருமான திரு திலக் கருணாரத்னா பத்திரிகைப்பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார் (த-எ)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

92 பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கு

## கலை, வர்த்தக வகுப்பு
## மீட்டல் பிரிவு III
## DAY CLASSES

# ஆரம்பம்: 26-01-93

8 மணி.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| கணக்கியல் | — | திரு. S. K பிரபாகரன் |
| வர்த்தகம் | — | திரு. இரகுநாதன் |
| அளவையியல் | — | திரு. A. பிரபாகரன் |

மாலை நேர வகுப்பு

| | | |
|---|---|---|
| இந்துநாகரிகம் / இந்துசமயம் | — | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — | திரு குழந்தை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

★ செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு நாட்களிலும் நடைபெறும்.
★ கணக்கியல் வகுப்பு வாரத்தில் 8 மணி நேரம் நடைபெறும்.

(சி-4209)

---

# மரண அறிவித்தல்கள்

## Dr. S. J.P. ARIARAJ

Dr. S. J. P. Ariaraj இங்கிலாந்தில் காலமானார். இவர் சுகாந்தினியின் அன்புக் கணவரும், லக்ஷ்மன், சுமித்திரன், தயாளன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், 68, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்த காலஞ் சென்ற திரு திருமதி எஸ். எஸ். பெரியதம்பி அவர்களின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற திரு. சாமுவேல் தம்பையா, திருமதி தம்பையாவின் அன்பு மருமகனும், திருமதி பொன்னுத்துரை, திருமதி ஸ்ரீபின், திருமதி தர்மானந்தன், திருமதி செல்லத்தம்பி, திருமதி பரணிரூபசிங்கம், திருமதி சிவஞானம் பிள்ளை, திருமதி புவனரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி கனகசுந்தரத்தின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (26-01 93) செவ்வாய்க்கிழமை இங்கிலாந்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்:
E. S. செல்லத்தம்பி

28/3, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர் தெற்கு.

(24206)

## சிவஸ்ரீ வைத்தியநாதக்குருக்கள் சதாசிவ ஐயர்

தெல்லிப்பளை குருநாதசுவாமி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் சதாசிவ ஐயர் அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் ஞானப்பூங்கோதை அம்மாவின் அன்புக் கணவரும், மகாலக்ஷ்மி, ஜெயலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி, வைத்தியநாதசர்மா, பரஞ்சோதி, யோகேஸ்வரசர்மா (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசுதக்குருக்கள், ராஜாக்குருக்கள் (தென் ஆபிரிக்கா), வித்தியானந்தசர்மா, ஸ்ரீசரஸ்வதி, சத்தியவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிமேலிதா, லலிதா, தரணீதரன், விஷ்ணுவர்தன், வைகுந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-01-93 இன்று முற்பகல் 10 மணியளவில் இணுவில் பருத்திப்பிள்ளையார் கோவிலடி அவரது இல்லத்தில் நடைபெற்று இணுவில் காரைக்கால் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். உற்றார், உறவினர் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி வை. சதாசிவ ஐயர்
குடும்பத்தினர்

குருநாதசுவாமி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை.

(24210)

---

விற்பனையாகின்றது! ரூபா 20/-

# யாதுமோசிச் கவிதைகள்

(24196)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கையில் மருந்திருக்க...

வடக்கு-கிழக்கு யுத்தத்துக்காக அரசாங்கம் அதிக பணத்தைச் செலவிடுவது குறித்து உலக வங்கி கவலையும் அதிருப்தியும் தெரிவித்திருக்கிறது. அவ்வங்கியின் தெற்காசியப் பிரிவின் உப தலைவர் திரு. ஜோசப் வூட் இது குறித்து தமது கவலையை வெளிப்படையாகத் தெரிவித்ததோடு மட்டுமன்றி, பாதுகாப்புக்காகச் செலவிடும் பணத்தைக் குறைக்குமாறும் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்.

உலக வங்கி பெயரளவில் சர்வதேச நிறுவனம் எனக் கருதப்பட்ட போதிலும் அது ஓர் அமெரிக்க முகவர் நிலையம் போலவே இயங்கி வருகிறது. பொதுவாக முதலாளித்துவத்தினதும் குறிப்பாக அமெரிக்காவினதும் பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் ஸ்தாபனமாகவே அது செயற்படுகிறது.

அமெரிக்காவினதும் ஏனைய முதலாளித்துவ மேற்குலக நாடுகளினதும் வர்த்தக, வருவாய் நலன்களை முன்விறுத்தி வகுக்கப்படும் கொள்கைத் திட்டங்களை ஏனைய நாடுகள் மீது திணிக்கும் இயல்பை உலக வங்கியின் செயற்பாடுகளில் அவதானிக்கலாம்.

மக்கள் மயம் என்ற பெயரில் தனியார் மயம், மானிய வெட்டுக்கள், தாராள இறக்குமதி ஆகியவற்றை மூன்றாம் உலக நாடுகளில் நடைமுறைப்படுத்துவதற்கு கடன் வழங்குதலை உலக வங்கி கருவியாகப் பயன்படுத்தி வருகிறது.

இத்தகைய பின்னணிகளைக் கொண்ட உலக வங்கிக்கு, ஸ்ரீலங்கா அரசாங்கம் வடக்கு-கிழக்கு யுத்தத்துக்காக பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்கிறது என்பது இப்போதுதானா தெரியும்? தான் அபிவிருத்தித் திட்டங்களுக்கென வழங்கும் கடன் உதவிகள், பண உதவிகள் என்பனவற்றில் பெரும் பகுதி வடக்கு கிழக்கு யுத்தச் செலவுக்குப் போய்ச் சேருகிறது என்பது உலக வங்கிக்குத் தெரியாதா?

தெரிந்தும் தெரியாதது போல, புரிந்தும் புரியாதது போல, கடந்த மூன்று வருடங்களாக ஸ்ரீலங்கா அரசுக்குத் தாராளமாக உதவி வரும் உலக வங்கி, இப்போது கவலை தெரிவிப்பதாகக் கூறுவது வெறும் கண் துடைப்பே. தான் விரும்பும் — அமெரிக்கா விரும்பும் — நலன்களை கொழும்பு அரசு நிறைவேற்றும் வரைக்கும் அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதே உலக வங்கியின் உண்மையான கொள்கையும் உள்ளார்ந்த விருப்பமும் ஆகும்.

இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் தனது செல்வாக்கை அதிகரித்து சொந்த வர்த்தக, அரசியல் நலன்களை மேம்படுத்த விரும்பும் அமெரிக்காவின் ஏஜன்சியான உலக வங்கி, கொழும்பு அரசு தனது பாதுகாப்புச் செலவை அதிகரித்து வருவது குறித்து உண்மையாகவே கவலை அடைந்தால், அந்தக் கவலையைப் போக்குவதற்கு மருந்தும் அதன் வசமே உண்டு.

தான் வழங்கும் சகல உதவிகளையும், கடன்களையும் உடனடியாக ரத்துச் செய்து, யுத்தத்தை நிறுத்திய பின்னரே அவற்றை வழங்க முடியும் என்று உலக வங்கி கொழும்பு அரசுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்குமானால், அதுவே உண்மையான கவலைக்கு அடையாளம். அவ்வாறு செய்வதன் மூலமே இலங்கையில் இடம்பெறும் இரத்தக் களரியை நிறுத்தி, பொருளாதார வளர்ச்சியை, தான் வழங்கும் உதவிகளுக்குரிய அறுவடையை அவ்வங்கி பெறமுடியும்.

உலக வங்கி தனது கையில் மருந்தை வைத்துக் கொண்டு நோய் வந்துவிட்டதாகக் கூறுவதால் என்ன பயன்?

## இன்று

ஒருநகர், ஜன. 25

யாழ் பிரதான வீதி திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு சித்திரக் கருத்தரங்கு ஒன்று நடைபெறும். (ஒ-51)

★ ★ ★

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்ட சைவசமய பாடப் பரீட்சையில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் 3-3 மணிக்கு சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய மண்டபத்தில் திரு. கு. பரராசசேகரம் தலைமையில் நடைபெறும். (த-7-117)

★ ★ ★

மயிலணி, ஜன. 25

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் நினைவு தினம் இன்று திங்கட்கிழமை மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் அதிபர் திரு. சு. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

நினைவுப் பேருரையை பண்டிதர் க. உமாமகேஸ்வரன் நிகழ்த்துவார். (ஒ-89)

## உற்சவம்

மயிலணி ஜன 25

ஏழாலை தெற்கு களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்மன் சித்திரத வெள்ளோட்ட விழா இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும். (ஒ-89)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 25

அருள்மிகு சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில் மஹோற்சவம் முன் முறையாக கொடியேற்றத் திருவிழாவுடன் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது. தேர்த்திருவிழாவும், தீர்த்தத் திருவிழாவும் முறையே எதிர் வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் நடைபெறும். (க-7)

## நாளை

''திராவிட மொழி ஆய்வின் இன்றைய நிலையில் தமிழ் — ஜப்பானிய ஒப்பீடு'' என்னும் பொருள் பற்றிய தொடக்க விரிவுரை ஒன்று, நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும். தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். [த-7]

## படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன. 25

அரியாலையில் — கண்டி வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மைசக்கிள் — வாகன விபத்து ஒன்றில் அரியாலையைச் சேர்ந்த எஸ். நடராசா (வயது 40) என்பவர் தலையில் படுகாயமடைந்தார்.

அவர் நினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-5)

## கிளி. - கொழும்பு தபால் சேவை

அரியாலை ஜன. 25

கிளிநொச்சி — கொழும்பு, தபால் சேவை வாரத்தில் மூன்று நாட்கள் நடைபெற்று வருகின்றது.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கிளிநொச்சி கிளை பிரிவினரின் கண்காணிப்பின் கீழ் இந்த தபால் சேவைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## 2ஆயிரம் பேர் மரணம்

மணிலா, ஜன. 25

பங்களாதேஷின் கரையோரப் பகுதிகளில் பரவியுள்ள வயிற்றோட்ட நோயினால் இந்த மாதத்தில் மட்டும் சுமார் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என அறிவிக்கப்படுகிறது. (த-5)

## கிளாலிப் படுகொலையில்

# மனைவி இறந்ததாக நம்பி கணவர் அதிர்ச்சி மரணம்

யாழ்ப்பாணம், ஜன 22

கிளாலிப் படகுச் சம்பவத்தில் கொலையுண்டவர்களின் பட்டியலில் தமது மனைவியின் பெயரை ஒத்த பெயரும் ஊர்ப் பெயரும் இருப்பதைப் பத்திரிகையில் படித்த கணவர், அதிர்ச்சியினால் மரணமான சம்பவம் வவுனியாவில் நடந்துள்ளது ஆனால் அவரது மனைவி உயிருடன் இருக்கிறார்!!

இந்தத் திகைப்பூட்டும் சம்பவம் குறித்து அறியவருவதாவது:-

கொக்குவில் மேற்கு, லோட்டஸ் வீதியைச் சேர்ந்த விசுவர் சின்னராசா, வவுனியாவில் வாழ்ந்த தமது மகனுடன் சென்று தொழில் புரிந்தார். மகனுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டு திகதியும் நிர்ணயிக்கப்பட்டது. மகனின் திருமணத்தை வவுனியாலேயே நடத்தும் பொருட்டு மனைவியையும் மற்றைய பிள்ளைகளையும் அங்கு வருமாறு செய்தி அனுப்பினார்.

கிளாலிச் சம்பவம் நடந்த தினத்திலேயே மனைவியும் பிள்ளைகளும் வவுனியாவுக்குப் பயணமாவதாகத் தகவல் அனுப்பியிருந்தனர். இம்மாதம் இரண்டாம் திகதி நடைபெற்ற கிளாலிப் படுகொலைகள் பற்றிய செய்தி அறிந்து தமது மனைவி பிள்ளைகளின் வரவை எதிர்பார்த்திருந்த திரு சின்னராசா மனக்குழப்பம் அடைந்தார்.

கிளாலிச் சம்பவம் பற்றிய செய்தி வந்த பத்திரிகை ஒன்றைப் படித்த போது இறந்தவர்களின் பட்டியலில் கொக்குவிலைச் சேர்ந்த பரமேஸ்வரி என்ற பெயரும் இருந்ததைக் கண்ணுற்றார். சிறிது நேரத்தில் சின்னராசா மயக்கமுற்று மரணமானதாகச் சொல்லப்படுகிறது. அவர் தமது மனைவி இறந்து விட்டார் என்று நினைத்தே அதிர்ச்சியினால் மரணமானதாக நம்பப்படுகிறது.

சின்னராசாவின் மனைவியும் பிள்ளைகளும் திட்டமிட்டபடி இரண்டாம் திகதி பயணம் செய்யவில்லை. திரு. சின்னராசா அதிர்ச்சியினால் மரணமான செய்தி இரண்டு தினங்களுக்கு முன்பே அவர்களுக்கு கிடைத்தது.

## இளவாலையில் இருந்து மீட்டெடுத்து

# எம்மை உறவினர்களுடன் சேர்க்க உதவுங்கள்

### யாழ் ஆயரிடம் கோரிக்கை

''எம்மை எமது உறவினர்களுடன் சேர்க்க ஏற்பாடு செய்து தாருங்கள்.''

— இவ்வாறு இளவாலைப் பகுதியில் அடைக்கலம் புகுந்துள்ள மக்கள் யாழ் ஆயரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இளவாலை, மாதகல் பகுதிகளுக்கு யாழ் ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் கடந்த வியாழக்கிழமை விஜயம் செய்திருந்தார்.

இளவாலை தேவாலயத்தில் தங்கியுள்ளவர்களுடன் ஆயர் கலந்துரையாடி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

தமக்கு போதிய உணவு வசதிகளோ, வைத்திய வசதிகளோ வழங்கப்படுவதில்லை என்றும் —

பெரும் அச்சத்தின் மத்தியில் வாழும் தங்களை மீட்டு தங்களின் உறவினர்களுடன் சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் அங்குள்ளவர்கள் ஆயரிடம் கோரினர்.

அங்கு ஏற்பட்டுள்ள சேதங்களையும் ஆயர் பார்வையிட்டார். (ஒ-3)

# மாகாணசபைத் தேர்தல்கள்; திருத்த சட்டமூலம் வரும்

வாக்காளர் இடம்பெயர்ந்திருந்தாலும் இருக்கும் இடத்திலேயே வாக்களிக்க வசதி செய்யக்கூடியதாக மாகாண சபைகள் தேர்தல் சட்டத்துக்குத் திருத்தம் கொண்டுவர அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

இத்திருத்தத்தின்படி—

வாக்காளர் ஒருவர் தமது சொந்த இடத்தில் இருந்து பாதுகாப்பான இடத்துக்கு இடம்பெயர்ந்திருந்தால்—

அதேவேளை பதிவு செய்யப்பட்ட இடத்தில் வாக்கை தேர்தலின்போது பயன்படுத்த முடியாதிருந்தால்- தேர்தல் ஆணையாளரின் அனுமதியுடன் இடம்பெயர்ந்த இடத்தில் தமது வாக்கை அவர் அளிக்கமுடியும்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளரின் முடிவை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்று அறிவிக்கப்படுகிறது. (த-எ)

# போருக்கு செலவிடும்பணம் இனி அபிவிருத்திப் பணிக்கு

### ஜனாதிபதி சொல்கிறார்

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு நீதியான ஒரு தீர்வினை வழங்கி யுத்தத்துக்குச் செலவாகும் பணத்தை வளர்ச்சிப்பணிகளுக்குச் செலவிட அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸா பேருவளையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியான நியாயமான தீர்வு கிடைக்கும். இந்த யுத்தத்துக்கு அன்று வருடாந்தம் 800 கோடி ரூபா செலவானது. இப்போது வருடாந்தம் 2 ஆயிரத்து300கோடி ரூபா யுத்தத்துக்குச் செலவிடப்பட்டு வருகிறது. இந்தப் பணத்தை நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவிட்டால் நாடு புரட்சிகரமானதோர் மாற்றத்தைக் காணும் —

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார். (த எ)

## மட்டுநகருக்கு நோர்வே குழு

யாழ்ப்பாணம், ஜன. 25

நோர்வே அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவிருக்கிறது. (உ 3)

## யாழ் மாவட்ட

# கல்வி நிர்வாகப் பிரிவை 3 வலயமாக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 25

யாழ். மாவட்ட கல்வி நிர்வாகப் பிரிவை மூன்று கல்வி வலயங்களாகப் பிரிக்க வேண்டும் எனக் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியவருகின்றது.

கோப்பாய், மானிப்பாய், வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை ஆகிய தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கி ஒரு கல்வி வலயமும் —

பருத்தித்துறை, உடுப்பிட்டி, சாவகச்சேரி தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய ஒரு கல்வி வலயமும் —

யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்றுறை ஆகிய தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய ஒரு கல்வி வலயமும் அமைக்கப்படும் என்று அறியவந்தது.

மாகாண கல்வி அமைச்சு அடுத்தபடியாக வலயத்திற்குரிய கல்வி அலுவலகத்தின் செயற்பாடுகள் அமையும் என்றும் — வலயக்கல்வி அலுவலகங்களுக்கு பொறுப்பாக ஒவ்வொரு கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தேர்தல் ஆணையாளரின் அறிக்கை:

# விவாதம் நடத்தக்கோரிக்கை; அரசாங்கம் நிராகரித்தது!

தேர்தல் ஆணையாளரால் வெளியிடப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிக்கை அன்று தேர்தல் எவ்வாறு நடந்தது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

ஆனால் இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்த கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் அக்கோரிக்கை அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தராஜபக்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எந்தவித தந்திரங்களைக் கையாண்டாலும் மீண்டும் இந்நாட்டை ஆளும் வாய்ப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லை என்றும், ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு தான அரசைக் கேட்டுக் கொள்வதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். (த-6)

## வலி. வடக்கு...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

கோவில் பூசகர் ஸ்ரீனிவாசன் குணநாதசிவம் (42 வயது)

கடந்த ஐந்து மாதங்களாக இளவாலை தடுப்பு முகாமில் தங்கியிருந்த அவர் அங்குள்ள நிலைமைகள் குறித்து மேலும் கூறியதாவது:-

தடுப்பு முகாமில் உள்ள மக்களுக்கு அரைகுறைச் சாப்பாடே கிடைக்கிறது. அவர்கள் நிம்மதியாக நித்திரையும் கொள்ள முடியாது. பலரும் மனோநிலை பாதிக்கப்பட்ட நிலையில் நடைபிணங்களாக நடமாடுகிறார்கள்.

ஒருவருக்கு வாரத்துக்கு 84 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களே வழங்கப்படுகின்றன 2 கிலோ அரிசி, 250 கிராம் பருப்பு, 100 கிராம் சீனி, 50 கிராம் தேயிலை ஆகியனவே வழங்கப்படும் பொருள்களாகும். மரக்கறிகளோ, உப்பு, புளி, மிளகாய் போன்றவையோ வழங்கப்படுவதில்லை. அரிசியையும், பருப்பையும் ஒன்றாகப்போட்டு சமைத்து ஒரு நாளைக்கு ஒரு வேளைக்குஅரைகுறைஉணவே சாப்பிட முடிகிறது. மற்ற இரு வேளைகளிலும் பட்டினிதான்.

### முகமூடிக்காரர் தொல்லை

இரவு நாட்களில் நிம்மதியாக நித்திரை கொள்ள முடிவதில்லை. முகமூடி அணிந்தவர்கள் அகதி முகாமுக்குள் மதில்களால் ஏறி விழுந்து வருவார்கள் அங்குள்ள பெண்களுடன் சேட்டை விடுவதற்கா அல்லது திருடுவதற்கா அவர்கள் வருகிறார்கள் என்பது தெரியாது

அவர்கள் வந்ததும் முகாமில் உள்ளவர்கள 'ஐயோ' என்று அவலக் குரல் எழுப்புவார்கள் உடனே பாதுகாப்புக்காக வைத்திருக்கும் தீப்பந்தங்களை ஏற்றி, பல் நிரப்பப்பட்ட போத்தல்களை அவர்கள் மீது வீசுவோம். இந்த அச்சுறுத்தலால் எவரும் நிம்மதியாக நித்திரை செய்ய முடியாத நிலை.

மேலும் அங்குள்ள மக்களில் பலரும் மனோநிலை பாதிக்கப்பட்டு நடைபிணங்களாகவே வாழ்கிறார்கள். பலர் சித்தசுவாதீன மற்றவர்களாகவும் திரிகிறார்கள்.

தினமும் ஷெல் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் சுற்றிவர கேட்கும். இதனால் அங்கிருந்தபோது பெரும் அச்சத்துடனேயே இருந்தோம். — என்று தெரிவித்தார். (அ-3-162)

## ஷெல் தாக்குதல்

சுழிபுரம், ஜன. 25

சுழிபுரம் கரையோரப் பகுதியை நோக்கி நேற்றுக் காலை ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. நேற்று முன்தினம் இரவும் தாக்குதல் இடம்பெற்றது. [ஓ-28]

## மருந்து தட்டுப்பாடு நீங்கியது

தென்மராட்சி, ஜன. 25

சாவகச்சேரி, பளை ஆஸ்பத்திரிகளுக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் மருந்து வகைகள் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் இப் பகுதியில் மருந்துக்கு நிலவிய தட்டுப்பாடு நீங்கியதாக தெரிவிக்கப்பட்டது. (த-117)

## மட்டக்களப்பில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளைத்த அதிரடிப் படையினர் அங்கிருந்து 30 தமிழர்களைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

முகாமுக்கு கொண்டு செல்லப்பட்ட தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்று அறிவிக்கப்பட்டது. (உ-3)

## தமிழ்-சிங்கள...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவோ ஏற்ற முடியும் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்

சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க அவுஸ்திரேலியா, கனடா, சுவீடன், நோர்வே, இங்கிலாந்து ஆகிய நாடுகள் முன்வந்துள்ளன. அவ்வாறே சமாதான முயற்சி தொடர்பாக ஐரோப்பா வரும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பை வழங்க இந்தியாவும் இணங்கியிருந்தது —இவ்வாறு அக்கட்டுரையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நிறைவின் நினைவுகள்



உதயம்: 21 — 03 — 1932

மறைவு: 18 — 01 — 1991

அமரர்

## பொன்னம்பலம் மகேந்திரன்

திதி: 25 — 01 — 1993

அன்புடன் அறிவையும், பண்பையும் ஊட்டி வளர்த்த எம் தந்தையே! நாம் பழமாகும் வேளையில் பயன் எதனையும் எதிர்பாராமல், ஓர் நொடிக்குள் எம்மை எல்லாம் விட்டுப் பறந்தாடி ஈராண்டு ஆகி விட்டதே!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

— குடும்பத்தினர்.

492, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம் (24207)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி

## ஞானமணி சதாசிவரத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியை, கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் வித்தியாலயம், சுன்னாகம் றோ க. த. பா.)

தோற்றம்: 06 - 09 - 1928

மறைவு: 28 - 12 - 1992

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். 26 01 - 93 செவ்வாய்க்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் 27 - 01 - 93 புதன்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

கணவர், சகோதரர்.
பெறாமக்கள், மருமக்கள்.

''ஞானஸ்தான்'',
சுன்னாகம். (5498)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# தெரிவுக் குழுவின் அறிக்கை இறுதிக் கட்டத்திலா!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழி வகைகளைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை இப்போது நகல் வடிவில் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது

தேவையான மாற்றங்களுக்காக இந்த நகல் தெரிவுக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது

தெரிவுக்குழு இந்த நகலுக்கு அங்கீகாரம் அளித்த பின்னர் அந்த அறிக்கை அடுத்த சில வாரங்களுக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(த-எ)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## V.T. ஐயாத்துரை

தோற்றம்:
02—12—1911

மறைவு:
25—01—1930

திதி: 21—01 1993

ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

''சணேஸபதி'',
கந்தையா ஒழுங்கை,
சாவகச்சேரி. (24126)

## சர்வதேச விமான நிலையம்

கொழும்பு, ஜன. 25

பொலன்னறுவை ஹிங்குராக் கொடையில் சர்வதேச விமான நிலையம் ஒன்றை நிர்மாணிக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் காரணமாக இடம்பெயரும் மக்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா நேற்றுத் தெரிவித்தார்.

வடமேற்கு, வடமத்திய, வடக்கு - கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்காக இந்தச் சர்வதேச விமான நிலையம் ஆஸ்திரேலிய உதவியுடன் கட்டப்பட விருப்பதாகவும் ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்தார்.

(ஒ எ)

## காணாமற்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

இக்குழுவில் டென்மார்க் வெளிவிவகார அமைச்சர் திரு. நைல்ஸ் ஹெல்வர், டென்மார்க் அரசின் வெளிவிவகார அமைச்சின் இரண்டாவது செயலாளர் பென்னி நிரகலர்கான், பேர்சிற்றி றெண்டம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

(உ-3)

# அந்தியேட்டி அழைப்பும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



அன்னையின் மடியில்: 26 — 01 — 1929

ஐங்கரன் அடியில்: 26 — 12 — 1992

வர்த்தலைவிளானைச் சேர்ந்த

அமரர்

## Dr. கனகசபை பூரணலிங்கம்

எமது இல்லக விளக்காக நல்வழிகாட்டி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டியும், வீட்டுக்கிருத்தியமும் இன்று 25-01-1993இல் நடைபெறும். இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து பிரார்த்திக்குமாறும், மதிய போசனத்தில் பங்கு கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

எமது அன்புத் தலைவரின் பிரிவு கேட்டு எமது இல்லம் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், சகல வகையிலும் பேருதவி புரிந்த அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்.

இ. போ. ச. டிப்போ அருகாமை,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (24199)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணவில்லை

திரு.

## சுந்தரமூர்த்தி சிவசுப்பிரமணியம்



திரு. சுந்தரமூர்த்தி சிவசுப்பிரமணியம் (ஆசாரியார்) வயது 52 என்பவரை, கடந்த ஆண்டு டிசம்பர் இருபத்திநான்காம் திகதி (24 - 12 - 92) முதல் காணவில்லை,

ஏறாவூர், நாலாம் குறிச்சியைச் சேர்ந்தவரும், வல்வெட்டித்துறை அம்மன் கோவிலடியைத் தற்போதைய இருப்பிடமாகக் கொண்டவருமான மேற்படி நபர் காணமற்போன தினத்தன்று மஞ்சள் நிற சேட்டும், வெள்ளைச் சாரமும் அணிந்திருந்தார்

இக் குறிப்பினையும், இப்படத்தினையும் அடையாளமாக வைத்து இனங்காணப்பட்டால் தயவு செய்து அருகாமையில் உள்ள காவல்துறையினரிடமோ அல்லது எமது வல்வெட்டித்துறை முகவரிக்கோ தெரிவிக்குமாறு தயவுடன் வேண்டுகின்றோம். தெரிவிப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் அளிக்கப்படும்.

நன்றி:

திருமதி சிவசுப்பிரமணியம் (ஆசாரியார்)
அன்னபூரணி

அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை. (சி/4286)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13 — 02 — 1970

மறைவு: 25 — 01 — 1991

## செல்வன் ச. சக்திபாலன்

பொறியியற் கல்வி கற்கப் போட்டியாம் பரீட்சை; தன்னிற்றிறமை நீ காட்டி நின்று தேறினை; மகிழ்ந்து நின்றோம் மறைந்தனை சேருமுன்னம் மறப்பமோ சக்தி பாலா! நிறைந்த நின் முகத்தை எண்ணி நெஞ்சமோ துடிக்குதைபா!

திதி: பூர்வபட்ச தசமி

ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அப்பா, அம்மா,
சின்னம்மா குடும்பத்தினர்.

சக்தி இல்லம்,
விதானை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. (5743)

# மரண அறிவித்தல்

## கனகரெத்தினம் ஜெகரூபி

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் 605/1, கே. கே. எஸ். வீதியில் வசித்தவருமாகிய செல்வி கனகரெத்தினம் ஜெகரூபி நேற்றுக் காலமானார்.

இவர் P T. கனகரெத்தினம் — சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகளும், ஜீவராணி, ஜீவரஞ்சினி, அம்பிகாதேவி, யசோரதி, செந்தில்ரூபன், தர்மரூபன் ஆகியோரின் சகோதரியும், மகேந்திரன், சிவநாதன், கௌரிகாந்தன் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற உலகநாதன், தம்பிராசா, சண்முகம், கனகரெட்ணம், தெய்வேந்திரன், காலஞ்சென்ற பரமசாமி, நாகேஸ்வரி, கனகேஸ்வரி ஆகியோரின் மருமகளும், இலட்சுமி, பரமேஸ்வரி ஆகியோரின் பெறா மகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. கனகரெத்தினம்

605/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (24211)

மேலும் மரண அறிவித்தல்கள் 2ஆம் பக்கத்தில்